1977 இல் சிறப்பு இறக்குமதி உரிமைச் சான்றிதழ் எண் 1 இன் அட்டவணை 1 மேலும் திருத்தியமைக்கப்பட்டது. முன்னுரிமை உரிமத்திற்கமைய குறிப்பாக மல்லி, சீனி, வளமாக்கி, தீப்பெட்டிகள், செயற்கைப் பிசின்கள், பிளாத்திக்கு பொருட்கள், தேயிலைப் பெட்டிகளுக்கான ஒட்டுப்பலகை தட்டுகள், பெட்டிப் பலகை, சில அடிப்படை உலோகங்கள், உள்ளமுக்கும் பொறிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல பொருட்கள், அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டன.

பல மரபுவழியற்ற ஏற்றுமதிகள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன. இருபத்தொரு பொருட்களைத் தவிர்ந்த ஏனையவற்றிற்குத் தேவையான முன்னுரிமை ஏற்றுமதி உரிமம் பெறல் நீக்கப்பட்டது. மீளப் பயன்படுத்த முடியாத மூலவளங்களைப் பாதுகாத்தல் குறிப்பாக நுகர்வு தேவைகளுக்கு உதவுதல், சூழ்நிலைகளைப் பாதுகாத்தல், நாட்டின் இயற்கையைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இச் சில பொருட்கள் உரிமம் பெறுதலின் கீழ் அடக்கப்படுகின்றன.

இவ்வாண்டில் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் மூகமாகப் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மை பயிர்களை மீளப்பயிரிடல், புதிதாகப் பயிரிடல் என்பவற்றிற்காகத் தொடர்ந்திருக்கும் உதவு தொகை திட்டங்கள் மேல் நோக்கி திருத்தியமைக்கப்பட்டன. 1978 இல் வியாபார நோக்கங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியைக் கருத்தாகக் கொண்ட வெளிநாட்டு மூலதனங்களைக் கவரும் முகமாக 'ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை' ஏற்படுத்துவதற்காக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு நிறுவப்பட்டது. 1968 இல் இம்மாதிரியான கைத்தொழில்களைத் தொடங்குவதற்காக 52 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

தற்போது நடைமுறைப்படுத்தலில் இருக்கும் (1979 இல் அறிமுகப்படுத்தப்பட்டது) இன்னுமொரு ஏற்றுமதியை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க நடவடிக்கையானது ஏற்றுமதி கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனமாகும். இக்கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்கள் தாராள அடிப்படையில் வங்கி நிதியைப் பெறுவதற்கு உதவியும், வெளிநாட்டு நுகர்வாளர்களினால் ஏற்படும் கால தாமதமான கொடுப்பனவுகள் அல்லது கொடுப்பனவுகள் இல்லாமை ஆகியவற்றினால் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் இடர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்கும். அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றை நிறுவும் மூகமான சட்டவாக்கங்கள் ஆக்க நிலையிலுள்ளன. ஏற்றுமதி அபிவிருத்திக்குத் தேவையான உரிமைகளை இச்சபை கொண்டிருக்கும்.

## சென்மதி நிலுவை[1]

1978 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவையின் செயலாற்றம் 1977 ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்களிலேயே பெரிதும் தங்கியிருந்தது. சென்மதி நிலுவையில் இவ்வழிமுறைகள் ஏற்படுத்திய உடனடித்தாக்கத்தை

1. சென்மதி நிலுவையில் பயன்படுத்தப்பட்ட வர்த்தகத் தரவுகள், அந்த ஆண்டின் உண்மைப் பெறுகைகளாகும். இவை முன்னர் தரப்பட்ட, இறக்குமதி ஏற்றுமதிகளின் அசைவைப் பிரதிபலிக்கும் வெளிநாட்டு வர்த்தகத் தரவுகளில் இருந்து வேறுபட்டதாகும். இவ்வேறுபாடு ஒரு புறத்தில் பெறுகைகளுக்கும், கொடுப்பனவுகளுக்கும் இடையிலான கால தடங்கல்களினாலும் மறுபுறம், பொருட்களின் இயல்பான அசைவினாலும் ஏற்படுவதாகும்,

1978 இல் உணரத்தக்கதாக இருந்தது. இத்தன்மை நடைமுறைக் கணக்குகள் 1977 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 12,660 இலட்சம் (சி. எ. உ. 1,160 இலட்சம்) மிகையில் இருந்து, 1978 இல் மீண்டும் ரூபா 7,820 இலட்சம் (சி. எ. உ. 640 இலட்சம்) பற்றுக்குறையாக மாறியமையிலிருந்து தெரிகின்றது, எவ்வாறெனினும் 1978 இல் வெளிநாட்டுச் சொத்துக்கள் மேலும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் இந்த ஆண்டு முடிவிலிருந்த ஒதுக்குகள் 1979 இல் எதிர்பார்க்கப்பட்ட முதல் நான்கு மாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கும் போதுமானதாக இருந்தது. வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி நீண்டகால மூலதனங்களில் கூடிய உட்பாய்ச்சல்களினால் உருவாக்கப்பட்ட மூலதனக் கணக்கின் மிகையினாலும், பன்னாட்டு நாணய நிதியத்தில் (ப. நா. நி.) இருந்து பெறப்பட்ட கடன்களினாலும் ஏற்பட்டது.

சென்மதி நிலுவையின்மீது செலாவணி, வர்த்தகம் ஆகியவை தாராளமாக்கப்பட்டதனால் ஏற்பட்ட தாக்கம் இறக்குமதியைப் பொறுத்தவரையில் நெருக்கடியை ஏற்படுத்தியது. சி. எ. உ, வில்[1] இறக்குமதிகளின் மீதான கொடுப்பனவுகள் 30 சதவீதத்தால் உயர்ந்துள்ளன; இறக்குமதிக் கொடுப்பனவுகள் 1977இல் ரூபா 62,900 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 6,220 இலட்சம்), 1978 இல் ரூபா 1,53,500 இலட்சமாக (சி. எ. உ. 8,080 இலட்சம்) அதிகரித்தது. பல ஆண்டுகளாக கட்டுப்பாடுகள் காரணமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த கேள்வி வெளிக்கொணரப்பட்டமை இறக்குமதியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு எடுத்துக்காட்டுகின்றது, இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முதலீட்டு, இடைநிலைப் பொருட்கள். விரைந்து இறக்குமதி செய்யப்பட்டமையே காரணமாகும். அதே வேளையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி குறைந்தவீத உயர்வையே காட்டியது. 1978 இல் மூலதனப் பொருட்களின் இறக்குமதியின் இரட்டித்த அதிகரிப்பு ஒருபுறம் பல வருடங்களாக உள்ளூர் கைத்தொழில்களில் ஏற்பட்ட தடைகளையும் மறுபுறம் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. முன்பு வெளிநாட்டுச் செலாவணி மூலவளத்தடைகளும், இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் சில இன்றியமையாத இறக்குமதிகளில் வெளிநாட்டு மூலவளங்கள் பயன்படுத்துவதை மட்டுப்படுத்தியதுடன், பொருளாதார வளர்ச்சியை நிலைத்து நிற்கச் செய்யத் தேவையான மூலதனப் பொருட்களில் உள்ளோட்டத்திற்கும் தடையாகவிருந்தன. பல விடயங்கள் மீது விதிக்கப்பட்ட இறக்குமதி உரிமங்கள் நீக்கப்பட்டதையடுத்து மூலதனப் பொருட்களின் இறக்குமதி மிகத் தீவிர முன்னேற்றத்தைக் காட்டியது. பொறி, கருவிகள், மூலப்பொருட்கள் ஆகியவை கூடியளவுக்கு கிடைக்கத்தக்கனவாக இருந்தமை கைத்தொழில் இயலளவைக் கூடியளவு பயன்படுத்தத் துணைநின்றது. (1978 இல் 70 சதவீதம்); ஒப்புநோக்குகையில் 1974-77 கொண்ட நாலாண்டு காலப் பிரிவில் கைத்தொழிலில் இயலளவு 57 சதவீதம் கொண்ட கீழ் மட்டத்திலிருந்தது.

1978 இல் இறக்குமதிக் கொடுப்பனவுகள் கணிசமாக அதிகரித்த போதும் ஆண்டிற்கென தொடக்கத்தில் எடுத்துக் காட்டிய மட்டத்திலும் பார்க்க ஓரளவு குறைவாகவே இருந்தது. இதற்குப் பல காரணங்கள் கூறலாம். முத

---

1. இலங்கையில் வழக்கமான செலாவணி விகித மாற்றங்களும் முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கிடையிலான நிலையற்ற தன்மையும் 1977 ஆம் ஆண்டு முதல் சென்மதி நிலுவையில் கால அளவு திரவுகளின் ஒப்பீட்டில் ஒரு சிக்கலான நிலையை ஏற்படுத்தின. திலையான நாணய அலகு இல்லாத நிலையில், ஒப்பீட்டு அடிப்படையிலான தேவைகளின் தொடர்பாக, பெருமளவு நிலையான சிறப்பு எடுப்பனவு உரிமை (சி. எ. உ,) கணக்கிடு அலகாக பயன்படுத்தப்படும்.

லாவதாக இறக்குமதி மீதான அளவுக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபோதும் இலங்கை ரூபாவின் பெறுமதி இறக்கத்தினால் இறக்குமதி விலைகள் உயர்ந்ததின் காரணமாக, இறக்குமதிக்கான கேள்வி மிதமான நிலையை அடைந்தது. இரண்டாவதாக பணவீக்கத்தைத் தடுக்கும் வழி முறையாக வங்கிக் கொடுகடன் இறுக்கமாக்கப்பட்டமை இறக்குமதியாளருக்கு திரவத் தன்மையில் தடையை ஏற்படுத்தியது. மூன்றாவதாக இறக்குமதி செய்யப்பட்ட சில பொருட்கள், குறிப்பாக நீண்டகால பாவனைக்குரிய பொருட்கள் இறக்குமதியாளர் எதிர்பார்த்ததற்கு அமைய உள்ளூர் சந்தையில் விரைந்து விற்பனையாகவில்லை. இது இறக்குமதியாளர்கள் சந்தையின் தன்மையை எளிதில் மதிப்பிடமுடியாத நிலையில் இருந்தனர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. நான்காவதாக நீண்டகாலம் தடைகள் இருந்ததன் காரணமாக புதிய அமைப்பை ஏற்று வெளிநாட்டு வர்த்தகரோடு மீண்டும் தொடர்பை ஏற்படுத்துவதில் இறக்குமதியாளர்களுக்கு மேலும் காலம் தேவைப்படும் என்பதனையும் இது எடுத்துக் காட்டுகிறது


இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளுக்கு மாறாக 1978 இல் ஏற்றுமதி வருவாய்கள் 1977 இல் ரூபா 66,400 (சி எ. உ. 6,510 இலட்சம்) இலட்சத்திலிருந்து 1978 இல் 1,32,070 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 6,850 இலட்சம்) எல்லையளவால் மட்டும் அதிகரித்ததனை பதிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் 4 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்த வேளையில் 1978 இல் எண்ணெய் அல்லாத அபிவிருத்தியுறும் நாடுகளில் மொத்த ஏற்றுமதி வருவாய்கள், தொகுதியாக 9 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வீதத்தில் வளர்ந்தன. அண்மை ஆண்டுகளில் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளின் வெளியீடுகள் தேக்கமுற்று இருந்ததினால் இத்தகைய பண்ட ஏற்றுமதிகளின் வருவாய் மட்டம் பன்னாட்டு சந்தை விலைகளின் தளம்பலுக்கேற்ப ஏறக்குறைய இயங்கின.

ஏற்றுமதிகளின் மெதுவான வளர்ச்சியினதும் இறக்குமதிகளின் மிக விரைவான வளர்ச்சியினதும் விளைவாக வர்த்தக மீதி 1977இன் ரூபா 3,500 இலட்சம் (சி. எ. உ. 280 இலட்சம்) மிகையிலிருந்து 1978இல் ரூபா 21,430 இலட்சம் (சி. எ. உ. 1,330 இலட்சம்) கொண்ட பற்றுக்குறையாக மாறியது.

தீர்ப்பனவுக் கணக்குகள் 1978இல் குறைந்த மிகையைக் காட்டின; மிகை 1977இல் ரூபா 3,040 இலட்சங்களிலிருந்து (சி. எ. உ. 290 இலட்சம்) 1978இல் ரூபா 1,190 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 60 இலட்சம்) வீழ்ந்தது. 1977 நவெம்பரில் வெளிநாட்டுப் பயணங்களின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து வியாபாரம், ஏற்றுமதி ஊக்குவிப்பு ஏனைய நோக்கங்களுக்கான இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணச் செலவு 1977 இல் ரூபா 330 இலட்சங்களிலிருந்து (சி. எ. உ. 30 இலட்சம்) 1978இல் ரூபா 4,440 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 230 இலட்சம்) பெருமளவில் அதிகரித்தது. சுற்றுலாவின் மொத்த வருவாய்கள் 1977இல் ரூபா 3,040 இலட்சங்களிலிருந்து (சி. எ. உ. 290 இலட்சம்) இவ்வாண்டில் ரூபா 7,500 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 380 இலட்சம்) உயர்த்திருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி ஆகியவற்றின் மீதான மிகை வீழ்ச்சியடைந்தது. இப்போக்குகளின் விளைவாக தீர்ப்பனவுக் கணக்கின் அதிகரிக்கின்ற போக்கு 1973இல் இருந்து நிலவிய நிலையை 1978 இல் மாற்றியமைத்தது. வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் பார்க்கும் இலங்கையர்களால் அனுப்பப்படும் பணவனுப்

## சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்





பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுகள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பல்கள் 1977இன் ரூபா 1,900 இலட்சங்களிலிருந்து (சி. எ. உ. 180இலட்சம்)1978இல் ரூபா 6,100 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 310 இலட்சம்) ஏறத்தாழ இரண்டு மடங்காக அதிகரித்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக மொத்த மாற்றல்கள் மீதான மிகையின் அதிகரிப்பு ரூபா 6,120 இலட்சங்களிலிருந்து (சி. எ. உ. 590 இலட்சம்) 1978இல் ரூபா 12,420 இலட்சங்களுக்கு (சி. எ. உ. 630) அதிகரித்தது.

அட்டவணை 1.12

## சென்மதி நிலுவை 1969 – 1978

பத்து இலட்சம் ரூபாய்களில்
(அடைப்புக் குறிக்குள் சி.எ.உ.ப.இ.)

| ஆண்டு | வர்த்தக நிலுவை | தேறிய பணிகள் | தேறிய மாற்றங்கள் | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவை | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1969 ... | — 746 | — 90 | + 39 | — 797 | + 275 | — 522 |
| | (— 157) | (— 19) | (+ 8) | (— 167) | (+ 58) | (— 110) |
| 1970 ... | — 315 | — 104 | + 69 | — 359 | + 184 | — 166 |
| | (— 52) | (— 17) | (+ 12) | (— 59) | (+ 31) | (— 28) |
| 1971 ... | — 287 | — 14 | + 85 | — 216 | + 404 | + 188 |
| | (— 47) | (— 2) | (+ 14) | — 35) | (+ 66) | (+ 31) |
| 1972 ... | — 255 | — 15 | + 74 | — 196 | + 292 | + 96 |
| | (— 38) | (— 2) | (+ 11) | (— 29) | (+ 44) | (+ 14) |
| 1973 ... | — 299 | + 53 | + 85 | — 161 | + 190 | + 29 |
| | (— 39) | (+ 7) | (+ 11) | (— 21) | (+ 25) | (+ 4) |
| 1974 ... | — 1263 | + 76 | + 280 | — 907 | + 298 | — 609 |
| | (— 138) | (+ 10) | (+ 35) | (— 113) | (+ 37) | (— 76) |
| 1975 ... | — 1421 | + 89 | + 560 | — 772 | + 559 | — 213 |
| | (— 168) | (+ 11) | (+ 66) | (— 91) | (+ 66) | (— 25) |
| 1976 ... | — 709 | + 112 | + 547 | — 50 | + 610 | + 560 |
| | (— 73) | (+ 12) | (+ 56) | (— 5) | (+ 63) | (+ 58) |
| 1977 ... | + 350 | + 304 | + 612 | + 1266 | + 563 | + 1829 |
| | (+ 28) | (+ 29) | (+ 59) | (+ 116) | (+ 54) | (+ 170) |
| 1978* ... | — 2143 | + 119 | + 1242 | — 782 | + 2640 | + 1858 |
| | (— 133) | (+ 6) | (+ 63) | (— 64) | (+ 135) | (+ 71) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*தற்காலிகம்

1978இல் சென்மதி நிலுவை அட்டவணை 1.12இல் காட்டப்பட்டுள்ளவாறு தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக அதன் அடிப்படை நிலுவையில் மீதியைக் காட்டியது. நடைமுறைக்கணக்கில் ரூபா 7,820 இலட்சம் (சி. எ.உ. 640 இலட்சம்) கொண்ட பற்றுக்குறைக்கு மாறாக அடிப்படை நிலுவையில் ரூபா 18,580 இலட்சம் (சி. எ. உ. 710 இலட்சம்) கொண்ட மிகை காணப்பட்டமை இவ்வாண்டில் நாட்டிற்குள் வந்த மிகக்கூடிய நீண்டகால மூலதன உள்ளோட்டங்களைப் பிரதிபலிக்கின்றது. தேறிய நீண்ட கால மூலதன உள்ளோட்டங்கள் 1978இல் இரண்டு மடங்காக உயர்ந்து ரூபா 26,400 இலட்சங் கொண்ட (சி. எ. உ. 1,350 இலட்சம்) என்றுமில்லாத மட்டத்தை அடைந்ததுடன் இது முன்னெப்பொழுதும் இல்லாத பெரும் அதிகரிப்பாகவும் இருந்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து ஏனைய பன்னாட்டு அமைப்புகளிலிருந்தும் வெளிநாட்டு அரசுகளிலிருந்தும் கிடைத்த உதவிகளின் அதிகரிப்பும் உயர்ந்த மூலதன உள்ளோட்டத்திற்கு உதவின. நிதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உள்நாட்டு நிதி மூலங்கள் போதாமல் இருந்ததன் காரணமாக, வெளிநாட்டு மூலதன உட்

பாச்சலின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது. அதேநேரம் 1978இல் பெறப்பட்ட புதிய கடன்களில் பெரும்பாலானவை சலுகை அடிப் படையில் பெறப்பட்டன.

தாராளமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இறக்குமதிக் கொடுப்பனவுகள் உயர்வடைந்தமையினுல் 1978இல் வெளிநாட்டு மூலவள இடைவெளி இரு மடங்கிலும் அதிகமாக அதிகரித்து ரூபா 37,980 இலட்சம் ஆகியது (சி. எ. உ. 2.190 இலட்சம்) (அட்டவணை 1.13). இது வெளிநாட்டு மூல வள இடை வெளி 1976இல் இன் ரூபா 24,560 இலட்ச உயர் மட்டத்தில் இருந்து (சி. எ. உ. 2,520 இலட்சம்) 1977இல் ரூபா 8,600 இலட்சமாக (சி. எ. உ. 870 இலட்சம்) வீழ்ச்சியடைந்தமைக்கு எதிர்மாறுனதாகும். தேயிலைக்கு சார் பான விலைகள் கிடைத்தமையால் ஏற்றுமதி வருவாய்கள் மிகப் பெருமளவில் அதிகரித்ததனுல் 1977இல் நிலைமை திருந்தியது. ஏற்றுமதி செயலாற்றம் வீழ்ச்சியுற்றதோடு இறக்குமதி உண்டியலும் உயர்ந்ததனுல் 1978இன் இடை வெளி பெருகியது. பணிகள் மீதான மிகை வீழ்ச்சியுற்றமையும் இவ்வாண் டில் மூலவள இடைவெளி அதிகரித்தமைக்கு ஓரளவு காரணமாக விருந்தது.

அட்டவணை 1.13


## வெளிநாட்டு மூலவளக்குறையை நிதியிடல் 1976 – 78

| வகைகள் | பத்து இலட்சம் ரூபாய் | | | சி.எ.உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 | 1976 | 1977 | 1978 |
| 1. வெளிநாட்டு வருவாய்கள் ... | 5,459 | 7,753 | 15,759 | 561 | 758 | 805 |
| 1,1 ஏற்றுமதிகள் ... | 4,707 | 6,640 | 13,207 | 484 | 651 | 675 |
| 1.2 பணிகள் ... | 643 | 923 | 1,942 | 66 | 89 | 99 |
| 1.3 தனியார் மாற்றல்கள் ... | 109 | 190 | 610 | 11 | 18 | 31 |
| 2. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ... | 7,915 | 8,613 | 19,557 | 813 | 845 | 1024, |
| 2.1 இறக்குமதிகள் ... | 5,417 | 6,290 | 15,350 | 557 | 622 | 808 |
| 2.2 பணிகள் ... | 584 | 687 | 2,091 | 60 | 66 | 107 |
| 2.3 மூலதன மீளக் கொடுப்பனவுகள் ... | 1,914 | 1,636 | 2,116 | 196 | 157 | 109 |
| 3. வெளிநாட்டு மூலவளக் குறை ... | —2,456 | —860 | —3,798 | — 252 | —87 | —219 |
| 4. மூலவளக்குறையை நிதியிடல் ... | +2,456 | + 860 | + 3,798 | + 252 | + 87 | +219 |
| 4.1 நீண்ட காலக் கடன்கள் 2 .. | 943 | 1,184 | 3,680 | 96 | 114 | 188 |
| 4.2 நன்கொடைகள் ... | 492 | 490 | 900 | 51 | 47 | 46 |
| 4.3 வர்த்தகக் கொடுகடன்கள்3 ... | 1,266 | 360 | 114 | 130 | 35 | 5 |
| 4.4 வங்கிக் கடன்பாடுகள் ... | 1 | 222 | — | — | — | — |
| 4.5 இருபுடை நிலுவைகள் ... | — | — | 1 | — | — | — |
| 4.6 ப. நா. நி. எடுப்பனவுகள்4 ... | 273 | 935 | 756 | 28 | 55 | 38 |
| 4.7 ஏனையவை5 ... | 59 | 119 | 208 | 7 | 11 | 10 |
| 4.8 வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | —568 | -4,171 | —1,904 | — 59 | -169 | — 65 |
| 5. பெறுமதிச் சீராக்கம்6 ... | — | 1,680 | 344 | — | — | — |
| 6. பிழைகளும தவறுகளும் ... | —10 | + 41 | — 301 | —1 | —6 | —3 |

1. மாற்றுதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட காலப்பளுவையொட்டிய சராசரி வீதங்கள் 1976இல் ரூ. 9.73 ஆகவும் 1977இல் ரூ. 10.42 ஆகவும் 1978இல் 19.58 ஆகவும் விளங்கின.
2. செயல்திட்டம், பண்டம், உணவு ஏனைய உதவிகளும்.
3. நிரம்பல்ர் கொடுகடன்களும் குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களும்.
4. எண்ணெய் வசதி எடுப்பனவுகளையும் உள்ளடக்கும்
5. தனியார்துறை மூலதனத்தையும் உள்ளடக்கும்.
6. செலாவணி வீத மாற்றங்களை அடுத்து வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்பட்ட மதிப்பிடப் பட்ட அதிகரிப்பு.

# செலாவணி வீதங்கள்

## 1977 நவெம்பர் 16 முதல் மொத்த சதவீத மாற்றங்கள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1978 இல் வெளிநாட்டு மூலவள இடைவெளி 1977 இன் நீண்டகால கடன்களிலேயே ஏறக்குறைய முழுமையாக நிதியிடப்பட்டது. நீண்டகால கொடுகடன்களின் மொத்த உள்ளோட்டம் 1977 இல் ரூபா 11,840 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 1,140 இலட்சம்) 1978இல் ரூபா 36,800 இலட்சத்திற்கு (சி. எ. உ. 1,880 இலட்சம்) கணிசமான அளவு உயர்ந்தது. இது 65 சதவீதம்கொண்ட அதிகரிப்பாகும். வழங்கப்பட்டகடன்களில் மூன்றில் ஒரு பங்கு பல அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு செயற்றிட்டக்கடனக (ரூபா 12,220 இலட்சம் அல்லது சி. எ. உ. 620 இலடசம்) வழங்கப்பட்டது. மேலும் பண்ட உணவு உதவி வழி முறையிலிருந்து ரூபா. 16,800 இலட்சம் (சி.எ.உ. 860 இலட்சம்) வழங்கப்பட்டது. பொறுப்பாண்மைநிதிய ஒழுங்குகளின்கீழ் பன்னுட்டு நாணய நிதியம் ரூபா 7,780 இலட்சத்தை (சி.எ.உ. 400 இலட்சம்) பன்னுட்டு நாணய நிதியம் வழங்கியது சென்ற ஆண்டின் பேச்சுவார்த்தைக்கு உட்பட்ட பன்னுட்டு நாணய நிதியத்தில் துணை ஒழுங்கின் கீழ் இரண்டு இறுதி இரு தவணைப் பணங்களாக ரூபா 7,560 இலட்சம் (சி.எ.உ. 380 இலட்சம்) வழங்கப்பட்டது. 1978 இல் நன்கொடையாக வழங்கப்பட்ட தொகை ரூபா 9,000 இலட்சமாக (சி. எ. உ. 460 இலட்சம்) விளங்கியது. வெளிநாட்டு செலாவணி அடிப்படையில் 1977 மட்டத்திற்கு இது ஏறக்குறைய சமமானதாகும். 1978இல் நீண்டகால நிதியிடலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக, 1977 போல் சலுகையற்ற குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களை நாடவேண்டிய தேவை மேலும் குறைக்கப்பட்டது.

மூலவள இடைவெளியை நிரப்புவதற்கு நீண்டகால கடன் வழங்கலும் நன்கொடைகளும் போதியளவிற்கு மேலாக இருந்ததனுல், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களுடனேயே மேலதிக வெளிநாட்டுச் செலாவணியும் சேர்ந்தது. சிறப்பு எடுப்பனவு உரிமையடிப்படையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 21 சதவீதத்தால் அதிகரித்து சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 3,710 இலட்சம் (ரூபா. 74,770 இலட்சம்) 1978 முடிவில் இருந்தது. இவை 1979 இல் எதிர்பார்க்கப்பட்ட இறக்குமதிகளில் 4 மாதங்களுக்கு நிதியிட போதியளவாயிருந்தன. மத்திய வங்கி வெளி நாட்டில் வைத்திருந்த திரவ நிலுவைகளின் அதிகரிப்பு வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பில் பிரதிபலித்தது.

வணிகப் பண்ட ஏற்றுமதிகளிலும், பணிகளிலும் பெற்ற வருவாய்களின் சதவீதமான படுகடன் தீர்ப்பனவு விகிதம் அதாவது மூலதன மீளக் கொடுப்பனவுகளும் வட்டியும் (பன்னுட்டு நாணய நிதி மீளக் கொள்வனவுகளையும் வங்கிக் கடன்பாடுகளையும் உள்ளடக்கி) 1977 இல் 16 சதவீதமாக இருந்து 1978 இல் 15 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவு திருந்தியது. நீண்ட காலக் கடன்களிலும் நிரம்பலர் கொடுகடன்களிலும் மூலதனத் திருப்பிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியுற்றமையும் ஏற்றுமதிகளிலும் பணிகளிலும் பெற்ற வருவாய்கள் வளர்ச்சியுற்றமையுமே இதற்கு பெருமளவு காரணமாகும். இடைக்கால சென்மதி நிலுவை உதவியைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட விரிவு படுத்தப்பட்ட நிதியத்தின் வாய்ப்பின் கீழ் ஒழுங்கு செய்வதற்காக பன்னுட்டு நாணய நிதியத்துடன் வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. 1979 முற்பகுதியில் ஒப்புதல் பெறப்படின் 1979 - 1981 காலப்பிரிவிற்கு இடையில் (சிறப்பு எடுப்பனவு உரிமை 2,603 இலட்சத்தை) ரூபா 5.2060 இலட்சம் இலங்கை கடன்பட முடியுமென எதிர்பார்க்கப்பட்டது. வழமையாக ஒவ்வொரு எடுப்பனவிற்கும் பின் 4-8 ஆண்டுகளுக்கிடையில் 16 சம தவணைகளில் இவ்

எடுப்பனவுகள் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும். இவை ஒரு ஆண்டுக்குட்பட்ட வெளிநிற்கும் நிலுவைகள் எனின் ஓராண்டிற்கு 4.375 சதவீத கட்டணத்திற்கு இப்போதைக்கு இவை உட்பட்டவை ஆகும். ஒவ்வொரு தொடர்ந்து வரும் ஆண்டிற்கும், ஒரு ஆண்டிற்கு 0,5 சதவீத அதிகரிப்பாக விளங்கி 6.875 சதவீத மட்டம் வரையும் இவை உயரும் வெளிநாட்டுப் படுகடனில் வெளிநின்ற தொகை 1977இல் ரூபா 1,32,210 இலட்சத்தில் இருந்து (சி.எ.உ. 7.050 இலட்சம்) 1978 இல் ரூபா 1,64,460 இலட்சத்திற்கு (சி.எ,உ 8,130 இலட்சம்) உயர்ந்தது. செயற்றிட்ட பண்ட உதவியை பெருமளவு உள்ளடக்கிய நீண்டகால கடன்களின் அதிகரிப்பினாலேயே இது ஏற்பட்டது. நீண்டகால கொடுகடனின் வெளிநின்ற மட்டம் 1977இல் ரூபா. 105,940 இலட்சத்திலிருந்து (சி,எ.உ. 5,610 இலட்சம்) 1978இல் ரூபா 1,38.030 இலட்சத்திற்கு (சி. எ. உ. 6,820 இலட்சம்) உயர்வுற்றது. குறுங்காலத்தில் முதிர்ச்சி பெறும் கொடுகடன்களை நாடும் தன்மை குறைவுற்று இருந்தமையினால் 1978 இல் வெளிநாட்டுப் படு கடனின் முதிர்ச்சி அமைப்பு மேலும் நீடிக்கப்பட்டது.

1978இல். ஐ. அ. டொலர் நீங்கலாக, முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி குறைந்தது. 1977 நொவெம்பரை அடுத்து பவுண் ஸ்ரேலிங்கிற்கு எதிராக ரூபாயின் பெறுமதி 8.3 சத வீதத்தாலும், யப்பானிய யென்னுக்கு எதிராக 18.8 சதவீதத்தாலும், டியூச் மாக்கிற்கு எதிராக 16.6 சதவீதத்தாலும், சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராக 6.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது. மாறாக ஐ.அ. டொலருக்கு எதிராக 3.2 சதவீதத்தால் ரூபா உயர்வுற்றது.

### அரச நிதித் தொழிற்பாடுகள்

1977 நவெம்பரில் கொண்டுவரப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் 1978இன் இறைத்தொழிற்பாடுகளினது மட்டத்திலும் போக்கிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. விலை மாற்றங்கள், வரி அடிப்படையை விரிவுபடுத்தியமை, வரி வீதங்களைச் சீராக்கியமை, உயர்ந்தளவு செலவுகள் என்பவை வரவு செலவுத்திட்டத்தைப் பெரும்பாலும் இரட்டிப்பாக்கியுள்ளன. இப் போக்கினைப் பொறுத்தவரையில் அரச செலவினத்தை நுகர்விலிருந்து முதலீட்டுக்கு மாற்றும் மீளமைப்பில் குறிப்பிடத்தக்க முயற்சி காட்டப்பட்டது. 1977 இன் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்த வரையில் அது 1978 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தகைய விளைவை ஏற்படுத்துமென்பதை முன்கூட்டியே மதிப்பிட முடியாதிருந்தது. இறுதியாக நடைமுறைக்கணக்கு ரூ. 7,010 இலட்சம் கொண்ட குறையைக் காட்டியது.

1978 இல் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் ரூ. 1,730 இலட்சம் கொண்ட பெயரளவிலான விரிவுத்தாக்கத்தைக் கொண்டிருந்ததாக அரச கணக்குத் தரவுகள் காட்டுகின்றன. ஆனால் குறிப்பிட்ட பணக் கொடுக்கல் வாங்கலைத் தீர்ப்பதற்கான சீராக்கங்கள் ஆண்டு முடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் ஆண்டு முடிவில் காணப்பட்ட மாற்றப்படாத காசோலைகளின் உயர்ந்த அளவினைக் கணக்கில் எடுக்கும்போது வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் ரூ. 8,930 இலட்சம் கொண்ட சுருக்கத்தாக்கத்தினைக் காட்டின.

---

1. தேசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் அரசினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட பெயரளவிலானமாற்றலாகிய ரூ. 3,900 இலட்சத்திற்கும், வருடமுடிவில் வரையப்பட்ட காசோலை ரூ. 6,660 இலட்சத்திற்கும் ஏற்பத் தரவுகள் சீராக்கப்பட்டன.